# DEPOSITION OF WITNESS
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.22/2022**

**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | மொபைல் சர்வீஸ் |
| பெயர் | - | அகமது சாலிக் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முகமது அலி | சமயம் | - | |
| கிராமம் | - | சோலையார் 2-வது டிவிசன் | வயது | - | 28/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-04-2025</u>**

**( எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் மொபைல் சர்வீஸ் கடைநடத்தி வருகிறேன். எதிரி முகமது நியாஸ் என்பவரை சம்பவத்தின் போது விசாரித்து தெரிந்துகொண்டேன். அவரை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். நான்வால்பாறையில் வளையல் கடை லயனில் மொபைல் சர்வீஸ் கடை வைத்துள்ளேன். கடந்த 23-02-2022-ம் தேதி இரவு 07.00 -07.30 மணியளவில் நான் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது எதிரி நியாஸ் என்பவரும் தஸ்லிமா என்ற பெண்ணும் என் கடைக்கு வந்தார்கள். நியாஸ் என்பவர் என்னை பார்த்து கேண்ப்புண்டை என்றுஅசிங்கமான வார்த்தைகளால் திட்டி எனது வலது கையை பின்புறமாக முறுக்கி எனது மூக்கின்மேல் கையால் குத்திவிட்டார். அதில் எனக்கு மூக்கில் ரத்தம் வந்துவிட்டது. நான் சத்தம் போடவே அருகில் இருந்த ராஜா மற்றும் கலாபேன்சி கடையின் உரிமையாளர் சோமசுந்தரம் என்பவரும் என்கடைக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் வந்தவுடன் எதிரி நியாஸ் அங்கிருந்து இரு சக்கரவாகனத்தில் சென்றுவிட்டார். நானும் தஸ்லிமா என்பவரும் காதலித்துவந்தோம். அந்த காரணத்திற்காக எதிரி என்னை தாக்கினார். ரகுமான் என்பவருக்கு தகவல் சொல்லிவிட்டு அவர் வந்தவுடன் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்கு அழைத்துசென்றார். எனக்கு சிறுவயதிலிருந்தே ரத்தம் உரைவுதன்மையற்ற நோய் உள்ளது. (ஹிமோ பீலியா) மருத்துவமனையில் என்னை பரிசோதிவிட்டு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். நான் கோவை அரசுமருததுவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வால்பாறை காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ளகையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அப்போது மூக்கின் எலும்பு உடைந்திருப்பதாகவும் மேல் சிகிச்சைக்காக வேலூர் CMC மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து தற்போது குறுக்குவிசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.22/2022**

**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | பாத்திரக்கடை |
| பெயர் | - | ராஜா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | தங்கவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | 45/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-04-2025</u>**

**( எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பாத்திரக்கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 அகமது சாதிக் என் கடைக்கு அருகில் மொபைல் கடை வைத்திருந்தார். எதிரி முகமது நியாஸ் என்பவரை சம்பவத்தன்று பார்த்திருக்கிறேன். அவரை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். கடந்த 23-02-2022-ம் தேதி மாலை 07.00 மணிக்கு மேல் நியாஸ் என்பவரும் ஒரு பெண்ணும் இரு சக்கர வாகனத்தில் என் கடை வழியாக வந்து அசா. 1 கடைமுன்பு நிறுத்தினார்கள். அவர்கள் வண்டியில் இறங்கி பேசிக்கொண்டிருந்தார்கள். நியாஸ் மட்டும் கடைக்குள் சென்றார். நியாஸ் என்பவர் ஆபாச வார்த்தைகளால் அகமது சாதிக்கிடம் பேசிக்கொண்டிருந்தார். நான் அப்போது கடைக்குள் எட்டி பார்க்கும் போது நியாஸ் அகமது சாதிக்கின் மூக்கில் கையால் குத்திவிட்டார். முக்கிலிருந்து ரத்தம் வந்தது. அப்போது நானும்பக்கத்து கடையை சேர்ந்த சோமசுந்தரம் என்பவரும் அங்கு சென்று தடுத்து நியாஸை வெளியே அனுப்பினோம். பின்னர் ரகுமான் என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து அவர் வந்தவுடன் அகமது சாதிக்கை ரகுமானுடன் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். சம்பவம் பற்றி போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து தற்போது குறுக்குவிசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.